**Minutes of Public Hearing held on 27.08.2024 at 10:00 A.M. in Thirumurugan Thirusabai Mahal, South Street, Near Kailasanathar Kovil, North Ariyanayagipuram, Cheranmahadevi Taluk Tirunelveli District with respect to the proposed project of Thiru. R P Rahul, Rough Stone and Gravel Quarry over an extent of 4.99.39 Ha in S.F. Nos. 719/1(Part), 720/1(Part), 720/2, 720/3, 720/4, 720/5, 720/6, 720/7, 720/8, 720/9, 720/10, 720/11, 720/12, 720/13(Part) and 720/14(Part) of Vadakku Ariyanayagipuram-II Village, Cheranmahadevi Taluk, Tirunelveli District**

**Details of participants in this meeting**

| | |
|---|---|
| Shri Arpit Jain., I.A.S., | - Sub Collector,<br>Cheranmahadevi, Tirunelveli District. |
| Tmt. S.V.Kalaivani | - District Environmental Engineer (FAC),<br>TNPC Board, Tiruneveli. |
| Public and Government Officials | - Details are attached (Annexure-1) |

The public hearing under EIA Notification, 2006 for the proposed project of Thiru. R P Rahul, Rough Stone and Gravel Quarry over an extent of 4.99.39 Ha in S.F. Nos. 719/1(Part), 720/1(Part), 720/2, 720/3, 720/4, 720/5, 720/6, 720/7, 720/8, 720/9, 720/10, 720/11, 720/12, 720/13(Part) and 720/14(Part) of Vadakku Ariyanayagipuram-II Village, Cheranmahadevi Taluk, Tirunelveli District was conducted on 27.08.2024 at 10.00 A.M.

District Environmental Engineer(FAC), Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Sub-Collector, Cheranmahadevi, Government officials, public, and industry representatives who have attended the Public Hearing. She informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification 2006. She also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu.

Then the Environmental consultant of the proposed project has made detailed presentation on the project of Thiru. R P Rahul Rough Stone and Gravel Quarry to the Public along with Environmental Management plan by Power Point Presentation.

Then, the District Environmental Engineer (FAC) has requested the public to express their views on the project orally or in writing and also informed that the public views are recorded and will be sent to the government.

Subsequently, the public has started expressing their views with respect to the project as follows.

**1. Mr. Arul Rajan - Ilanthaikulam:-**

He said that there is no job opportunity in our town, no agricultural industry and our survival is due to this quarry. It is because of this quarry work that we are able to educate our children.

**2. Mr. Paul Xavier - Ilanthaikulam:-**

I have educated my 3 daughters by working in this quarry. My daughter has completed her B.A in 3 years with the salary earned from working in this crusher.

**3. Mr. Pariraj - Ilanthaikulam:-**

I am working in this quarry. My family is running on the salary that I used to work in this quarry. People from the neighboring town come to work in this quarry and there is no harm from the quarry.

**4. Mr. Anthony Raj - Thalarkulam:-**

I am working in this quarry. My livelihood comes only through this quarry and I request you to ensure that this quarry runs continuously.

**5. Mr. Shanmugam - Ambasamudram:-**

More than 1000 people are employed in this quarry. I am a driver. There is no guarantee of life for Tamil Nadu drivers if they go outside.If you work in a quarry near the city, you can stay with your relatives and family. So we need this quarry.

**6. Mr. Robinsingh - Singamparai:-**

I have studied EEE. There is no job opportunity suitable for my studies. So I am going to this company. It is convenient to run my family.

**7. Mr. Murugan - North Ariyanayakipuram:-**

I have studied diploma electrician. I am married and was jobless for a year. After coming to this quarry, I got a job. He has not worked anywhere for a year he said.

**8. Mr. Selvakumar - Cheranmahadevi:-**

He said when taking soil in a stone quarry, soil should be taken layer by layer. Itmakes people climb from the bottom to the top. Also, many accidents are happening so qualified drivers should be employed. This is the owner's job. Thirdly, the poor people in this town should be given jobs.

**9. Mr. Chenbagam - Ariyanayakipuram:-**

I have completed Diploma in Electrical Engineering. I have worked in all the companies around.I got salary of 10000, 9000, 8000 in all companies. After joining here I am getting expected salary. This quarry is the reason for my living without difficulties. He said that as another quarry is coming the educated youth around this town will get jobs.

**10. Mr. Francis Xavier - Singambarai:-**

He said, I have worked in many places. Working here in the quarry is relaxing and earns good income. Quarry is a source of livelihood for many people. No one is disturbed by the quarry. This quarry has improved our livelihood.

**11.Mr.Navaneethakrishnan- :**

I have been working outside for ten years. This quarry will give me a job opportunity and live happily with my children in my hometown. So I welcome this Quarry.

**12. Mr. Balakrishnan - North Ariyanayakipuram:-**

Many youths of our village work in this quarry. I was jobless in Chennai for ten years. I am taking care of my family by coming here and working as a driver. We must have this quarry.

**13. Mr. Anthony Viyagappan - Singamparai:-**

I belong to a poor family and am well educated. I didn't get a job even after studying. When I asked for a job in this quarry, I was given a job.Now working here I am leading my family prosperously without any hindrance. There is no problem with running this quarry. This quarry should grow and provide employment to workers like us. This will improve the livelihood of workers.

**14. Mr. Arokkiam - Velarkulam:-**

I was suffering a lot. My family is happy because I came to this quarry business for 2 years. So we definitely need this quarry. There is no problem with the surrounding environment. This quarry is secure for us.

**15. Mr. M. Jagatheesan - Panayankurichi:-**

I did not get a job nearby for what I studied. My family is doing well because of working in this stone quarry.

**16. Mr. Michael Rajan - Singamparai:-**

I am fine because I work in this quarry. So we need this quarry;

**17. Mr. Issakkipandi - Arikesanallur:-**

I have been driving for ten years. It feels good to see family. It will be good if this quarry comes.

**18. Mrs. Arockiya Varuvel:-**

My husband works in a quarry. I have three children. If we leave this job now, we have no choice. So the proposal of this quarry should be accepted.

**19. Mrs. Ramalakshmi - Mukkudal:-**

I come to work by bicycle. Even for making beedi we are not paid as much as we deserve. There is no job opportunity anywhere else. I have been working

here for more than 2 years. I have paid all my debts by working here. It is because of this quarry that we are at peace. We need this quarry.

**20. Mr. Varghese - Ilanthaikulam:-**

I used to stay outside this village and do construction work. I come to town only once in a month. It is good to work nearby only after the arrival of this quarry. Having a quarry helps us. So we definitely need this quarry.

**21. Mr. Mariyappan - Odaimarichankulam Village:-**

If educated people come to this quarry, there is a job opportunity. I give my full support to this quarry.

**22. Mr. Daniel Dhinakaran - Odaimarichan:-**

There is no disturbance from this quarry. There is job opportunity only after the arrival of this quarry.

**23. Mr. Jesu - Ilanthaikulam:-**

I have completed B.Com. I stayed outside and worked. It takes 2-3 days to come home for vacation. You can't come to your hometown when you want. If quarry comes, we will get a job in our hometown. I support the arrival of this quarry.

**24. Mr. Durai - Veeravanallur:-**

Establishment of similarquarries will provide employment opportunities to the youth. So I fully support the coming of this quarry.

**25. Mr. M. Ganesan - Velarkulam:-**

I worked for seven years in Seshasayee Mill. There is no sufficient income. I am working in KKM crusher since 2 years now. I am earning enough. I am also paying off my debt. As far as KKM is concerned, there is no risk and no environmental pollution. So KKM should continue to grow prosperously.

**26. Mr. John Peter - Singamparai:-**

My family is living only because of this quarry. I have no other income.

**27. Mr. Arun - Kaakkanallur:-**

I think it will be good if this quarry comes. 200 people like me suffer in other towns, better let us suffer in our hometown. So we think that everyone wants this quarry. They do it right without harming the environment. No one is harmed by the quarry, the whole town is benefited. So I request that Quarry is required.

**28. Mr. Selvaraj - Suthamalli:-**

As R.P.Rahul Quarry starts there is a lot of job opportunity for the youth. So I request the Sub Collector Sir to give permission to allow this quarry.

**29. Mr. Murugan - Ariyanayakipuram:-**

I am selling leaf bundle only. Only 3 bundles are sold. This will affect it.

**30. Mr. Muppulipandian - Kakanallur, Ambasamudram:-**

I am 30 km away. I am working in Chennai. This quarry provides employment to 200, 300 people. This quarry is there without any impact to the nearby town. So I welcome this quarry.

**31. Mr. Muthupandi - Kovilkulam:-**

This quarry is 25 km away from us. 500 families have livelihood due to this quarry. Therefore, this quarry is needed.

**32. Mr. Michael Raj - Veeravanallur:-**

I have been working in Quarry recently for 3 months. Water is sprayed 3-4 times in this quarry to keep dust from flying. People who come to work are properly given food for 3 times.Medical expenses are also taken care of. No harm from the quarry. They pay according to the job. So livelihood is good.

**33. Mr. Michael Anthony - Singamparai:-**

I have 2 girls and 1 boy who is not walking; Here I am working in this quarry and there is no disturbance from the quarry. Must have this quarry.

**34. Mrs. Jennifer - Singamparai:-**

It has been 2 years since I joined this quarry. Working in this quarry makes it easier for my children to study and support the family. If you support the coming of this quarry, you will get employment. It will be easier to run the family.

**35. Mrs. Barberal - Ilanthaikulam:-**

If we want to go to work, we have to go to Tirunelveli. If the quarry comes nearby, we will get good work. I have small children and it would be easier to go home early. So, I request you to have this quarry.

**36. Mrs. Rajathi - Ilanthaikulam:-**

There is no company nearby. We have to go to Tirunelveli for work. It is difficult to go to Tirunelveli leaving small children. So I support this quarry.

**37. Mr. Isakiraj - Thalarkulam:-**

I have been a lorry driver for ten years and there is no proper wage. Now my family is happy and relieved as I work here in this quarry.

**38. Mr. Vellapandi - Melakuniyoor:-**

I was working in Chennai and was struggling a lot. I came to town and looked for work in many places. They provided work. My family is fine. My son is studying IT and it also helps to pay for his studies. We don't have any other way to survive.

Also there was 1 representation received towards the project as follows

1. Thiru. R.Santhanganesh, S/o. T. Rajakani, 10/52 Kambalathan kovil, south street, Veeravanallur petition dated: 24.08.2024

The details mentioned in the complaint are as follows:-

The proposed quarry of 4.99.39 ha in North Ariyanayakepuram Part 1 Village in Cheranmahadevi Taluk, Tirunelveli District. Public hearing meeting for rough stone and gravel quarrying in the area will be held on 27.08.2024. Mr. Rahul already has a quarry in that village. If the permission granted to start one more quarry in the area the environment will be damage and also it will cause environmental damage and the groundwater level will also be affected. Also there is a pond near the quarry which is used by the people of the village and therefore it has been suggested to cancel the public hearing meeting for the quarry.

At the end of the meeting, after receiving the total number of 74 petitions (supporting petitions 74 and objection petitions has not been received) given by the public in written form to the Sub Collector, Cheranmahadevi. The District Environmental Engineer thanked all the public who remained silent till now and voiced their opinions. The meeting was concluded after informing that all comments of the public have been recorded and the recorded comments will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA).

24/09/2024

**District Environmental Engineer(FAC),**
**Tamilnadu Pollution Control Board,**
**Tirunelveli**

27/11/24

**Sub Collector,**
**Cheranmahadevi,**
**Tirunelveli.**

**திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம் , அரியநாயகிபுரம் பகுதி 2, புல எண்கள். 719/1(பகுதி), 720/1(பகுதி), 720/2, 720/3, 720/4, 720/5, 720/6, 720/7, 720/8, 720/9, 720/10, 720/11, 720/12, 720/13(பகுதி) மற்றும் 720/14(பகுதி) விஸ்தீரணம் 4.99.39 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. ஆர்.பி. ராகுல் ரஃப் ஸ்டோன், மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 27.08.2024 அன்று காலை 10.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், வடக்கு அரியநாயகிபுரம், வடக்கு தெரு கைலாசநாதர் கோவில் அருகில் உள்ள திருமுருகன் திருச்சபை மஹாலில் வைத்து நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

இக்கூட்டத்தில் பங்குபெற்றவர்களின் விபரம்

1. திரு.அர்பித் ஜெயின், இ.ஆ.ப - சார் ஆட்சியர், சேரன்மகாதேவி, திருநெல்வேலி மாவட்டம்.

2. திருமதி. சு.வ. கலைவாணி - மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், (மு.கூ.பொ) தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி.

3. பொது மக்கள் மற்றும் அரசு அதிகாரிகள்- பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

******

திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம் , அரியநாயகிபுரம் பகுதி 2, புல எண்கள். 719/1(பகுதி), 720/1(பகுதி), 720/2, 720/3, 720/4, 720/5, 720/6, 720/7, 720/8, 720/9, 720/10, 720/11, 720/12, 720/13(பகுதி) மற்றும் 720/14(பகுதி) விஸ்தீரணம் 4.99.39 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள திரு. ஆர்.பி. ராகுல் ரஃப் ஸ்டோன், மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்திற்கு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் அப்பகுதி பொதுமக்களின் கருத்தினை அறிய பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம், திருநெல்வேலி மாவட்டம், சேரன்மகாதேவி வட்டம், வடக்கு அரியநாயகிபுரம், வடக்கு தெரு கைலாசநாதர் கோவில் அருகில் உள்ள திருமுருகன் திருச்சபை மஹாலில் 27.08.2024 அன்று காலை 10.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் (மு.கூ.பொ), தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அவர்களையும், ஏனைய அரசு அதிகாரிகளையும், பொதுமக்கள், தொழில் நிறுவனத்தின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006-ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றி பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என தெரிவித்து, எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார். கூட்டத்திற்கு வந்திருந்த பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து எடுத்துரைத்து, திட்டம் குறித்தான பொதுமக்கள் தங்கள் கருத்துக்களைஅமைதியான முறையில் ஒருவர் பின் ஒருவராக பெயர், ஊரினை தெரிவித்து, கருத்துக்களை பதிவு செய்யுமாறும் கேட்டுக்கொண்டார். மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக் கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

பின்னர் பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்தில் கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களது கருத்துக்களை தெரிவிக்குமாறும், தொழிற் திட்டம் தொடர்பான விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, கூட்டம் துவங்குவதாக அறிவித்தார்.

அதன்பின் திரு. ஆர்.பி. ராகுல், ரஃப் ஸ்டோன் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டம் தொடர்பாகவும் புள்ளிவிளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியின் பரப்பளவானது 4.99.39 ஹெக்டேர் பரப்பளவு என்றாலும், அருகில் 500 மீட்டர் சுற்றளவுக்குள் அமைந்துள்ள பிற இரு குவாரிகளின் பரப்பளவை கூட்டும் பொழுது 5 ஹெக்டேர் பரப்பளவிற்கு அதிகமாக வருவதால், மத்திய சுற்றுச்சூழல் வழிகாட்டுதலின்படி, பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பதால், இக்கருத்துக்கேட்பு கூட்டம் நடத்தப்படுவதாகவும், திட்டம் குறித்த சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த சர்வே எண், அமையவுள்ள ஊர், அதன் பரப்பளவு, எவ்வளவு கிராவல் மற்றும் கற்கள் 5 வருடகாலத்தில் வெட்டி எடுக்கப்படும், அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் குறித்த விரிவான விளக்கங்களை பொதுமக்களுக்கு விளக்கி கூறினார்.

அதனைத் தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(மு.கூ.பொ) அவர்கள், பொதுமக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ எழுத்து பூர்வமாகவோ ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

1. <u>திரு. அருள் ராஜன் - இலந்தைகுளம்:-</u>

எங்கள் ஊரில் வேலை வாய்ப்பு இல்லை, விவசாய தொழில் இல்லை இந்த குவாரியால் தான் எங்கள் பிழைப்பு நடக்கிறது. இந்த குவாரி வேலை செய்வதால் தான் எங்கள் பிள்ளைகளை படிக்க வைக்க முடிகிறது.

2. <u>திரு. பவுல் சேவியர் - இலந்தைகுளம்:-</u>

இந்த குவாரியில் வேலை பார்த்ததால் தான் நான் எனது 3 பெண் பிள்ளைகளை படிக்க வைத்திருக்கிறேன். இந்த கிரஷரில் வேலை பார்த்த சம்பளத்தை வைத்து தான். என் மகள் மூவரும் பி.ஏ படித்து முடித்துள்ளார்கள்.

3. <u>திரு. பரிராஜ் - இலந்தைகுளம்:-</u>

நான் இந்த குவாரியில் தான் வேலை பார்க்கிறேன். இந்த குவாரியில் வேலை பார்த்த சம்பளத்தை வைத்துதான் என் குடும்பம் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த குவாரியில் பக்கத்து ஊரிலிருந்து வந்து வேலை பார்க்கிறார்கள், குவாரியால் எந்த பாதிப்பும் இல்லை.

4. <u>திரு. அந்தோணி ராஜ் - தாளார்குளம்:-</u>

நான் இந்த குவாரியில் தான் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் வாழ்வாதாரமே இந்த குவாரி மூலமாக தான் கிடைக்கிறது தொடர்ச்சியாக இந்த குவாரி இயங்க வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

5. <u>திரு. சண்முகம் - அம்பாசமுத்திரம்:-</u>

இந்த குவாரியில் 1000த்திற்கு மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பு இருக்கிறது. நான் டிரைவராக இருக்கிறேன். வெளியூர் சென்றால் தமிழக ஓட்டுநர்களுக்கு உயிர் மேல் உறுதி

இல்லை. ஊருக்கு அருகில் குவாரியில் வேலை பார்த்தால் உற்றார் உறவினர், மற்றும் குடும்பத்தினருடன் இருந்துக் கொள்ளலாம். அதனால் எங்களுக்கு இந்த குவாரி வேண்டும்.

6. திரு. ராபின்சிங் - சிங்கம்பாறை:-

நான் EEE படித்திருக்கிறேன். என் படிப்பிற்கு தகுந்த வேலை வாய்ப்பு இல்லை. அதனால் இந்த கம்பெனிக்கு செல்கிறேன். எனது குடும்பத்தை நடத்துவதற்கு வசதியாக இருக்கிறது.

7. திரு. முருகன் - வடக்கு அரியநாயகிபுரம்:-

நான் டிப்ளமோ இலக்ட்டிரீசியன் படித்திருக்கிறேன். எனக்கு திருமணமாகி ஒரு வருடம் வேலை இல்லாமல் தான் இருந்தேன். இந்த குவாரி வந்தபின் தான் வேலை கிடைத்திருக்கிறது. ஒரு வருடமாய் வேறு எங்கும் வேலைக்கு செல்லவில்லை.

8. திரு. செல்வகுமார் - சேரன்மகாதேவி:-

கல்குவாரியில் மண் எடுக்கும் போது படிக்கட்டு போல் மண் எடுக்க வேண்டும். அதாவது மக்கள் கீழிருந்து மேல் ஏறுவது போல் செய்யுங்கள். இரண்டாவது, நிறை விபத்துகள் நடக்கிறது அதனால் தகுதியுள்ள ஓட்டுநர்கள் வைத்து வேலை செய்ய வேண்டும். இது உரிமையாளரின் வேலை. மூன்றாவது, இந்த ஊரில் உள்ள கஷ்டப்பட்ட மக்களுக்கு வேலை அமைத்து கொடுக்க வேண்டும்.

9. திரு. செண்பகம் - அரியநாயகிபுரம்:-

நான் டிப்ளமோவில் Electrical Engineering முடித்திருக்கிறேன். சுற்றியுள்ள அனைத்து கம்பெனிகளிலும் வேலை பார்த்துவிட்டேன். எல்லா கம்பெனிகளிலும் 10000, 9000, 8000 தான் சம்பளம் வாங்கியிருக்கிறேன். இங்கு சேர்ந்தபின் தான் எதிர்ப்பார்த்த சம்பளம் வாங்குகிறேன். கஷ்டம் இல்லாமல் இருப்பதற்கு காரணம் இந்த குவாரி தான். மற்றொரு குவாரி வருவதால் இந்த ஊரை சுற்றியுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும்.

10. திரு. பிரான்சிஸ் சேவியர் - சிங்கம்பாறை:-

நான் நிறைய இடத்தில் வேலை பார்த்திருக்கிறேன். இங்கு குவாரியில் வேலை பார்க்கும்போது நிம்மதியாக இருக்கிறது, நல்ல வருமானம் கிடைக்கிறது. குவாரியால் நிறைய பேருக்கு பிழைப்பு இருக்கிறது. குவாரியால் யாருக்கும் எந்த இடையூறும் இல்லை. இதனால் எங்கள் வாழ்வாதாரம் மேம்பட்டிருக்கிறது.

11. நவநீதகிருஷ்ணன்:-

நான் பத்து வருடம் வெளியே வேலை செய்துக் கொண்டிருக்கிறேன். இந்த குவாரி வருவதால் எனக்கு ஒரு வேலை வாய்ப்பு கிடைக்கும். சொந்த ஊரில் பிள்ளைகளோடு சந்தோஷமாக வாழலாம். அதனால் இந்த குவாரி வருவதை வரவேற்கிறேன்.

12. திரு.பாலகிருஷ்ணன் - வடக்கு அரியநாயகிபுரம்:-

இந்த குவாரியில் எங்கள் ஊர் இளைஞர்கள் நிறைய பேர் வேலை பார்க்கிறார்கள். நான் சென்னையில் பத்து வருடம் வேலை இல்லாமல் இருந்தேன். இங்கு வந்து ஓட்டுநர் வேலை பார்ப்பதால் குடும்பத்தை நடத்திக் கொண்டிருக்கிறேன். கண்டிப்பாக இந்த குவாரி வேண்டும்.

13. திரு. அந்தோணி வியாகப்பன் - சிங்கம்பாறை:-

நான் கஷ்டப்பட்ட குடும்பத்தை சார்ந்தவன், நன்றாக படித்திருக்கிறேன். படித்தும் வேலை கிடைக்கவில்லை. இந்த குவாரியில் வேலை கேட்டபோது வேலை கொடுத்தார்கள். இப்போது இங்கு வேலை பார்ப்பதால் எனது குடும்பத்தை எந்த இடையூறும் இல்லாமல் செழுமையாக வழி நடத்திக் கொண்டிருக்கிறேன். இந்த குவாரி நடத்துவதால் எந்த பிரச்சனையும் இல்லை. இந்த குவாரி வர வேண்டும், எங்களை போல் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும். இதனால் தொழிலாளர்கள் வாழ்வாதாரம் முன்னேறும்.

14. <u>திருமதி. ஆரோக்கியம் - வேளார்குளம்:-</u>

நான் மிகவும் கஷ்டப்பட்டு கொண்டிருந்தேன். 2 வருடம் இந்த குவாரி தொழிலுக்கு வந்ததால் என் குடும்பம் சந்தோடிமாக உள்ளது. அதனால் இந்த குவாரி எங்களுக்கு கண்டிப்பாக வேண்டும். சுற்றியுள்ள சூழலுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. எங்களுக்கு இந்த குவாரி பாதுகாப்புதான்.

15. <u>திரு. மு. ஜெகதீசன் - பனையன்குறிச்சி:-</u>

நான் படித்த படிப்பிற்கு பக்கத்தில் வேலை எங்கேயும் இல்லை. இந்த கல் குவாரியில் வேலை பார்ப்பதால் எனது குடும்பம் நன்றாக நடந்துக் கொண்டிருக்கிறது.

16. <u>திரு. மிக்கேல் ராஜன் - சிங்கம்பாறை:-</u>

நான் இந்த குவாரியில் வேலை பார்ப்பதால் நல்லா இருக்கிறேன். அதனால் இந்த குவாரி எங்களுக்கு வேண்டும்.

17. <u>திரு. இசக்கிப்பாண்டி - அரிகேசநல்லூர்:-</u>

நான் பத்து வருடமாய் வண்டி ஓட்டிக் கொண்டிருக்கிறேன். குடும்பத்தை பார்க்க நல்லா இருக்கிறது. இந்த குவாரி வந்தால் நல்லா இருக்கும்.

18. <u>திருமதி. ஆரோக்கிய வறுவேல்-</u>

எனது கணவர் குவாரியில் வேலை பார்க்கிறார்கள். எனக்கு மூன்று பிள்ளைகள். இப்போது இந்த வேலையை விட்டால், எங்களுக்கு வேறு வழி இல்லை. அதனால் இந்த குவாரி வருவதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

19. <u>திருமதி. இராமலெட்சுமி - முக்கூடல்:-</u>

நான் மிதிவண்டியில் தான் வேலைக்கு வருவேன். பீடி சுத்தினாலும் கூட எங்களுக்கு அதற்கு தகுந்தது போல் கூலி கிடையாது. வேறு எங்கேயும் வேலை வாய்ப்பு இல்லை. நான் இங்கு 2 வருடத்திற்கு மேல் வேலை பார்க்கிறேன். இங்கு வேலை பார்த்து தான் எனது கடனையெல்லாம் அடைத்திருக்கிறேன். நாங்கள் நிம்மதியாக இருப்பது இந்த குவாரியால் தான். இந்த குவாரி வேண்டும்..

20. <u>திரு. வர்க்கீஸ் - இலந்தைகுளம்:-</u>

நான் வெளியூரில் தங்கி கட்டுமான தொழில் செய்து வந்தேன். மாதம் ஒரு முறை தான் ஊருக்கு வருவேன். குவாரி வந்தபின் தான் பக்கத்தில் வேலை பார்க்க நன்றாக இருக்கிறது. குவாரி இருப்பதால் உதவியாக இருக்கிறது. அதனால் கண்டிப்பாக இந்த குவாரி வேண்டும் .

21. <u>திரு. மாரியப்பன் - ஓடைமரிச்சான்குளம் கிராமம்:-</u>

என்னைப் போல் படித்தவர்களுக்கு இந்த குவாரி வந்தால் வேலை வாய்ப்பு இருக்கிறது. என்னுடைய முழு ஆதரவையும் இந்த குவாரிக்கு தருகிறேன்.

22. <u>திரு. டேனியல் தினகரன் - ஓடைமரிச்சான்:-</u>

இந்த குவாரியால் எந்த இடையூறும் இல்லை. குவாரி வந்தபின் தான் வேலை வாய்ப்பு இருக்கிறது.

23. <u>திரு. ஜேசு - இலந்தைகுளம்:-</u>

நான் B.Com முடித்திருக்கிறேன். நான் வெளியூரில் தங்கி வேலை பார்த்தேன். விடுமுறைக்கு ஊருக்கு வருவதென்றால் 2,3 நாட்கள் ஆகும். நினைத்தநேரத்தில் சொந்த ஊருக்கு வர முடியாது. குவாரி பக்கத்தில் வந்தால் சொந்த ஊரிலே வேலை கிடைக்கும். இந்த குவாரி வருவதற்கு ஆதரவு கொடுக்கிறேன்.

24. திரு. துரை - வீரவநல்லூர்:-

இதேப் போல் குவாரி வருவது இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தரும். அதனால் இந்த குவாரி வருவதை முழுமையாக ஆதரவளிக்கிறேன்.

25. திரு. எம். கணேசன் - வேளார்குளம்:-

நான் ஏழு வருடங்களாக Seshasayee மில்லில் வேலை பார்த்தேன். போதிய வருமானங்கள் இல்லை. இப்போது 2 வருடங்களால் கே.கே.எம் கிரஷரில் வேலை பார்க்கிறேன். எனக்கு போதுமான வருமானம் கிடைக்கிறது. எனது கடனையும் அடைத்து வருகிறேன். கே.கே.எம்.பொருத்தவரை எந்த வித ஆபத்தும் கிடையாது, சுற்றுச்சூழல் மாசுபாடு எதுவும் கிடையாது. அதனால் தொடர்ந்து செழிப்பாக கே.கே.எம் வளர வேண்டும்

26. திரு. ஜான் பீட்டர் - சிங்கம்பாறை:-

இந்த குவாரியால் தான் எனது குடும்பம் ஓடிக் கொண்டிருக்கிறது. வேறு எந்த வருமானமும் எனக்கு இல்லை.

27. திரு. அருண் - காக்கநல்லூர்:-

இந்த குவாரி வந்தால் நல்லாயிருக்கும் நினைக்கிறேன். என்னைப் போல் 200 பேர் வெளியூரில் கஷ்டப்படுவதற்கு. நமது சொந்த ஊரில் கஷ்டப்பட்டுவிட்டு போகலாம். அதனால் அனைவரும் குவாரி வேண்டும் என்று தான் நினைக்கிறோம். சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் இல்லாமல் சரியாக தான் செய்கிறார்கள். குவாரியால் யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லை, எல்லா ஊருக்கும் நன்மைதான். அதனால் குவாரி வேண்டும் என்பதை வேண்டுகோளாக வைக்கிறேன்.

28. திரு. செல்வராஜ் - சுத்தமல்லி:-

திரு. ஆர்.பி. ராகுல் குவாரி ஆரம்பிப்பதால் இளைஞர்களுக்கு நிறைய வேலை வாய்ப்பிருக்கிறது. அதனால் இந்த குவாரி அமைவதற்கு சார் ஆட்சியர் அவர்கள் அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

29. திரு. முருகன் - அரியநாயகிபுரம்:-

நான் இலைக் கட்டு தான் விற்கிறேன். 3 கட்டு தான் விற்றுருக்குது. இதனால் பாதிப்பு வரும் .

30. திரு.முப்புலிப்பாண்டியன் - காக்கநல்லூர், அம்பாசமுத்திரம்:-

நான் 30 கி.மீ வித்யாசத்தில் இருக்கிறேன். நான் சென்னையில் வேலை பார்க்கிறேன். இந்த குவாரியால் 200, 300 பேருக்கு வேலை வாய்ப்பு வருகிறது. பக்கத்தில் ஊருக்கு எந்த பாதிப்பு இல்லாமல் தான் இந்த குவாரி இருக்கிறது. ஆகையால் இந்த குவாரியை வரவேற்கிறேன்.

31. திரு. முத்துப்பாண்டி - கோவில்குளம்:-

எங்களுக்கும் இந்த குவாரிக்கு 25 கி.மீ வித்தியாசம். இந்த குவாரி வருவதால் 500 குடும்பங்களுக்கு வாழ்வாதாரம் இருக்கிறது. ஆகையால் இந்த குவாரி வேண்டும்.

32. திரு. மைக்கேல் ராஜ் - வீரவநல்லூர்:-

குவாரியில் சமீபத்தில் 3 மாதம் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த குவாரியில் தூசு பறக்காமலிருப்பதற்கு தண்ணீர் 3-4 முறை அடிக்கிறார்கள். வேலைக்கு வரும் மக்களுக்கு உணவு 3 வேளையும் சரியாக கொடுக்கிறார்கள். மருத்துவ செலவும் பார்த்துக் கொள்கிறார்கள். குவாரியால் எந்த பாதிப்பும் இல்லை. வேலைக்கு தகுந்தது போல் ஊதியம் கொடுக்கிறார்கள். ஆகையால் வாழ்வதாரம் நன்றாக உள்ளது.

33. திரு. மிக்கேல் அந்தோணி - சிங்கம்பாறை:-

எனக்கு 2 பெண் பிள்ளைகள், 1 நடக்காத பையன் இருக்கிறான் இங்கு இந்த குவாரியில் வேலை பார்க்கிறேன் குவாரியால் எந்த இடையூறும் இல்லை. கண்டிப்பாக இந்த குவாரி வேண்டும்.

34. திருமதி. ஜெனிபர் - சிங்கம்பாறை:-

இந்த குவாரியில் வேலைக்கு சேர்ந்து 2 வருடங்களாகிறது. இந்த குவாரியில் வேலை செய்வதால் என் குழந்தைகளின் படிப்பிற்கும், குடும்பத்தை நடத்தவும், எளிதாயிருக்கிறது. இந்த குவாரி வருவதற்கு ஆதரவு கொடுத்தால், வேலை வாய்ப்பு கிடைக்கும். குடும்பத்தை நடத்துவதற்கு எளிதாக இருக்கும்.

35. திருமதி. பார்பரால் - இலந்தைகுளம்:-

நாங்கள் வேலைக்கு செல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி தான் செல்ல வேண்டும். பக்கத்தில் குவாரி வந்தால் எங்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். எனக்கு சின்ன குழந்தைகள் இருக்கிறது, வீட்டிற்கு சீக்கிரமாக செல்ல நன்றாகயிருக்கும். எனவே, இந்த குவாரி வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

36. திருமதி. ராஜாத்தி - இலந்தைகுளம்:-

பக்கத்தில் எந்த நிறுவனமும் இல்லை, வேலைக்கு திருநெல்வேலி வரை செல்ல வேண்டியுள்ளது. சிறு குழந்தைகளை வைத்துவிட்டு திருநெல்வேலிக்கு செல்வது கடினம். பக்கத்தில் குவாரி வந்தால் வேலை கிடைக்கும் என எதிர்ப்பாக்கிறோம். அதனால் இந்த குவாரிக்கு ஆதரவு தெரிவிக்கிறேன்.

37. திரு. இசக்கிராஜ் - தாளார்குளம்:-

நான் பத்து வருடங்களாக லாரி டிரைவராக இருக்கிறேன், அங்கு சரியான ஊதியம் கிடைக்காததால் இங்கு குவாரியில் வேலை பார்த்து என் குடும்பம் சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் இருக்கிறது.

38. திரு. வெள்ளப்பாண்டி - மேலக்கூனியூர்:-

நான் சென்னையில் வேலை செய்து மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தேன். ஊருக்கு வந்து பல இடங்களில் வேலை தேடினேன். இவர்கள் வேலை தந்தார்கள். என் குடும்பம் நன்றாக இருக்கிறது. என் மகன் ஐ.டி படிக்கிறான், அதற்கான கட்டணம் கட்டுவதற்கும் உதவியாக உள்ளது. இந்தக் குவாரியால் தான் எங்களுக்கு பிழைப்பு வேறு வழியே கிடையாது.

இத்திட்டத்தை குறித்து பெறப்பட்ட புகார் மனு விபரம் பின்வருமாறு:

1. திரு. ரா. சந்தன கணேஷ், த/பெ. த. ராஜகனி, 10/52 கம்பளத்தம்மன் கோவில், தெற்குத் தெரு, வீரவநல்லூர் அவர்களின் புகார் மனு நாள்: 24.08.2024.

புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் பின்வருமாறு:-

திருநெல்வேலி மாவட்டம் சேரன்மகாதேவி வட்டத்தில் உள்ள வடக்கு அரியநாயகிபுரம் பகுதி 1 கிராமத்தில் 4.99.39 ஹெக்டேர் பரப்பளவில் சாதாரண கல் மற்றும் கிரால் குவாரிக்கான பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் 27.08.2024 அன்று நடைபெறவுள்ளது. தி/ள். ராகுல் அவர்களுக்கு எற்கனவே ஒரு குவாரி அந்த கிராமத்தில் உள்ளது. அந்த நிறுவனத்தால் அந்த பகுதியில் சுற்றுச்சூழல் பாதிப்பு எற்பட்டுள்ள நிலையில் புதியதாய் மேலும் ஒரு குவாரி தொடங்க அனுமதி அளித்தால் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதோடு நிலத்தடி நீர் மட்டமும் பாதிப்படையும். மேலும் குவாரி அருகே ஊர் மக்கள் பயன்படுத்தும் குளம் ஒன்று உள்ளது எனவே குவாரிக்கான கருத்து கேட்பு கூட்டத்தை ரத்து செய்யுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்ட முடிவில், பொதுமக்கள் சார் ஆட்சியர், சேரன்மகாதேவி அவர்களிடம் மொத்தம் 74 மனுக்கள் (ஆதரவு மனுக்கள் 74 மற்றும் ஆட்சேபனை மனுக்கள் எதுவும் பெறப்படவில்லை) அளித்த பின் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் இதுவரையில் அமைதி காத்து தங்கள் கருத்துக்களை கூறிய பொதுமக்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொண்டார். மேலும் பொதுமக்களுடைய கருத்துக்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பதிவுசெய்யப்பட்ட கருத்துக்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு (SEIAA) அனுப்பி வைக்கப்படும் என்ற தகவலையும் தெரிவித்துக் கொண்டவுடன் கூட்டம் நிறைவு செய்யப்பட்டது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்(மு.கூ.பொ),
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி.

சார் ஆட்சியர்,
சேரன்மகாதேவி.